**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.7/2025 அதன் இ.ம.எண்.2/2025 அதன் அ.வ.எண்.155/2025**

1. செல்லம்மாள்
2. வெங்கடாசலம் (எ) வெங்கடேசன்
3. அரிராமன்
4. அரிராமன் ... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

–எதிர்–

சுடலையாண்டி (எ) முருகேசன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பாக 18.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மணிகண்டன் முன்னிலையாகி வாதுரை செய்யாத நிலையிலும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் முன்னிலையாகி வாதுரை செய்யாத நிலையிலும், இரு தரப்பு வாதுரை முடித்துவைக்கப்பட்டும், மனு, எதிருரை, வழக்கு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, 06.10.2025 ம் தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாத காரணத்தினால், மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச உத்தரவை இரத்து செய்து உத்தரவிடக் கோரி, மனுதாரர்களால் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இடைக்கால மனு எண் 2/2025 ஆனது 06.10.2025 தேதியில் எதிர்உரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரரர்களுக்கு

வருவாய்துறையில் இருந்து சில ஆவணங்களின் விபரங்கள் கேட்டு தெரிய வேண்டி இருந்ததாலும், மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் அன்றைய தினம் மனுதாரர்களால் எதிர்உரையை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், எனவே மனுதாரர்களுக்கு எதிராக 06.10.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

3) மனுதாரர்களுக்கு எதிர்உரை தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு கடைசியாக 26.09.2025 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. அதன் பின் 06.10.2025 அன்று எதிர்உரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாமல் கட்டளை 17 விதி 1ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் இடைக்கால மனுவின் 2/2025ன் மனுவில் சாதகமான உத்தரவை பெறக்கூடாது என்பதற்காக 04.11.2025 அன்று மேற்படி மனுவின் உத்தரவிற்காக மேற்படி மனு வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு பொய்யான காரணங்களை கூறியுள்ளார்கள். மனுதாரர்களுக்கு உடல்நிலை சரியில்ல என்று காட்டுவதற்கு எந்தவொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே ஒருதலைபட்சம் ஆகிவிட்டு காலம் கடத்தும் நோக்கத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கு ஆகும்.

4) மனுதாரர்களுக்கு எதிராக இ.ம.எண் 2/2025ல் 06.10.2025 அன்று ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இ.ம.எண் 2/2025 ஆனது 2வது மற்றும் 3வது தபசில் சொத்தில் வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவரது முகவர்களோ எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது

என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாகவும், வருவாய் துறையில் இருந்து சில விவரங்கள் கேட்டு தெரிய வேண்டி இருந்ததாலும், 06.10.2025 அன்று எதிர்உரை மனுதாரர்களால் தாக்கல் செய்ய முடியவில்லை என்று கூறியுள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படாது. ஆனால் இந்த மனுவை தள்ளுபடி செய்தால் மனுதாரர்கள் தரப்பில் அவரது வழக்கை நிரூபிக்க முடியாமல் போகும். எனவே நீதியின் நலன் கருதி மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக எதிர்மனுதாரருக்கு மனுதாரர்கள் செலவுத்தொகை செலுத்துவதன் பேரில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு, ரூ.750 ஐ 09.01.2026 தேதிக்குள் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக செலுத்துவதன் பேரில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Uploaded on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.01.03 17:05:53 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Uploaded on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.01.03 17:06:02 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.7/2025 அதன்**

**இ.ம.எண்.2/2025 அதன்**

**அ.வ.எண்.155/2025**

சீரான / வரைவு – உத்தரவு
03.01.2026